பக்கங்கள் 16 + 04

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## மோ. சைக்கிள் விபத்தில் மாணவன் ஒருவர் மரணம்

### மட்டக்களப்பில் சோகம்



மட்டக்களப்பு, களு வாஞ் சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 15 வியாழக்கிழமை 28.03.2024 அதிர்வு 241



### இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்திய

# ஞானசார தேரருக்கு 4 வருட கடூழியச் சிறை

### கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

பொதுபலசேனவின் பொதுச்செய லாளர் கலகொட அத்தே ஞானசார தேர ருக்கு கொழும்பு மேல் நீதி மன்றம் நான்கு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகேவால் இந்தத் தீர்ப்பு இன்று வழங்கப்பட்டுள்ளது. 04

# வவுனியாவில் இளம் யுவதி சடலமாக மீட்பு!



### பொலிஸார் தீவிர விசாரணை

(கே.வசந்தன்)

வவுனியா, சமனங்குளம் பகுதியில் இருந்து 23 வயது யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று சிதம் பரபுரம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

சமனங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இளம் யுவதி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்படுகின்றார் என்று சிதம்பரபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார், யுவதியின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஆசிகுளம், சிதம்பரபுரம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய கவிப்பிரியா என்பவராவார்.

இது தொடர்பில் சிதம்பரபுரம் பொலி ஸார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.





# யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இன்று காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்ட சட்ட ஒழுங்குகள், சட்டவிரோதச் செயற்பாடுகள் மற்றும் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தல், விவசாயம், காணி விடுவிப்பு, சமூக பாதுகாப்பு நலன்புரி விடயங்கள், சட்டவிரோத மதுபான விற்பனையைக் கட்டுப்படுத்தல், தீவகங்களுக்கிடையிலான கடல் கடந்த போக்குவரத்து சேவைகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுமதி பெறும் செயற்றிட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராசா கஜேந்திரன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்











# கிழக்கு மாகாண ஆளுநரால் அம்பாறையில் குளம் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வறட்சியான காலங்களில் விவசாயிகளின் பயிர்ச் செய்கைக்கு உதவும் வகையில் அம்பாறை லாகுகல நுகே வெவ குளத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்தக்குளம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர் முத்துபண்டா, கடற்றொழில் மற்றும் நீரியல் வள மீன்பிடி திணைக்கள பணிப்பாளர் சுதாகரன் உட்பட அரச அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.









# கற்சேனை விஷ்ணு வித்தியாலய சாதனையாளர்களுக்குப் பாராட்டு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கற்சேனை விஷ்ணு வித்தியாலயத்தில் சாதனையாளர் பாராட்டு நிகழ்வும், சேனையூர் சிற்றிதழ் வெளியீட்டு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (26) பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றன.

வித்தியாலய அதிபர் எஸ். சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கடந்த 8 வருடங்களாக தேசிய பொதுப் பரீட்சைகள், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் போன்றவற்றில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்கள் துணை நின்ற ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு கல்வி வலய கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது சேனையூர்- 2 சிற்றிதழ் வெளியீட்டு வைக்கப்பட்டது. இதற்கான நயவுரையை ஆசிரிய ஆலோசகர் பு. சதீஸ்குமார் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எஸ். மகேந்திரகுமார், ந. குகதாசன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ரகுவரன், மூ. உதயகுமாரன், பாலர் பாடசாலைப் பணியக நிறைவேற்றுப் பணிப்பாளர் சந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## நாமலுக்குக் காலம் உள்ளது

# ரணிலுக்கே வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்

### மொட்டுக் கட்சிக்கு அமைச்சர் பிரசன்ன அறிவுரை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியில் முன்னிறுத்துவதற்கு பொருத்தமான வேட்பாளர் இல்லை எனவும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இன்று மொட்டுக் கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் பதில்களும் வருமாறு,

**கேள்வி:** நாமல் ராஜபக்ஷ மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளராகப் பதவியேற்றுள்ளார். பழையவர்களை, கட்சியை விட்டு வெளியேறியவர்களை மீண்டும் வருமாறு அழைக்கின்றார். வேலை செய்ய முடியுமா?

**பதில்:** அவர் பதவியை ஏற்று அவரது எண்ணப்படி செயற்படுவது அவரது பொறுப்பு. அது சரியா, தவறா என்று சொல்ல எனக்கு உரிமை இல்லை. கட்சிக்கு நல்லது நடந்தால் அதை மட்டுமே விரும்புகிறோம்.

**கேள்வி:** தேசிய அமைப்பாளர் பதவி மாற்றம் குறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்:** பஸில் ராஜபக்ஷ இருப்பது தான் எனக்குத் தனிப்பட்ட முறையில் பிடிக்கும். 2015 ஆம் ஆண்டு மிகவும் கடினமான நேரத்தில் பொறுப்பை ஏற்றவர். நாங்கள் அவருடன் பணியாற்ற பழகி புரிந்துணர்வுடன் இருக்கின்றோம். புதிய நபர் வரும்போது அவருடன் இணைந்து பணியாற்ற பழகிக்கொள்ள வேண்டும். அந்தச் சவாலை பஸில் எடுத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றேன்.

**கேள்வி:** இந்த இக்கட்டான நேரத்தில் பஸிலால் இதை ஒன்று சேர்க்க முடியுமா?

**பதில்:** அரசியல் செய்யும் போது அனைத்தையும் சிந்திக்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும். அவர் அதைப் பற்றி சிந்திக்கிறார். தமது வாக்குகளை மட்டும் நினைத்தால் தேசிய அமைப்பாளராக அரசியல் செய்ய முடியாது. 2005 ஆம் ஆண்டு, பஸில் ராஜபக்ஷ திரைமறைவில் இருந்து மஹிந்தவுக்காகத் தேர்தல் பிரசாரம் செய்தார். அப்போதும் அவருடன் இணைந்து பணியாற்றினேன். அன்று முதல் இன்று வரை அவருடன் அரசியல் செய்தவன் என்ற முறையில் எனது தனிப்பட்ட கருத்தை முன்வைத்து வருகின்றேன். தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அவர் விலகியதும், கட்சியின் அரசியல் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

**கேள்வி:** தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாமல் ராஜபக்ஷவின் நியமனம் திருப்திகரமாக இல்லை என்பது உங்கள் கருத்தா?

**பதில்:** அவரால் முடியுமா, இல்லையா என்பதைக் காட்ட அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். எதிர்கால முடிவுகளுடன் எடுக்கப்படும் முடிவுகளுடன் அணியை ஒன்றாக வைத்திருப்பது அவரது பொறுப்பு. பஸில் அதைச் சரியாகச் செய்தார். எமக்கு எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு செயற்பட முடிந்தது.

**கேள்வி:** நாமலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களை ஆரம்பித்திருக்கின்றாரா?

**பதில்:** இன்னும் ஐந்திலிருந்து பத்து வருடங்களில் நாமலுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என நினைக்கின்றேன். அப்போது அவர் போட்டியில் கலந்து கொள்ளும் அனுபவத்தைப் பெறலாம். அப்போது இந்த நிலையைப் புரிந்து கொண்டு தேர்தல் பணிகளைத் தொடங்கி புதிய பின்னணியை உருவாக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்தச் சவாலை ஏற்று அதை எதிர்பார்க்கலாம் என்றால், அந்தப் பொறுப்பை ஏற்று அதைச் செய்வது சரிதான்.

**கேள்வி:** ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் தற்போது ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு பொருத்தமான எவரும் இல்லை என நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்:** அவ்வாறான ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவதற்கு எனக்குத் தெரியவில்லை.

**கேள்வி:** நம்பிக்கையுடன் சொல்கிறீர்களா?

**பதில்:** ஊடகங்களுக்கு பொய் சொல்லுவேனா

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மோ. சைக்கிள்....

விபத்தில் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலுமொருமாணவன்படுகாயமடைந்துள்ளார்.

பெரியகல்லாறு மயான வீதியில் மேற்படி இரு மாணவர்களும் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற நிலையில் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது மின்சாரத் தூணில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரியகல்லாறு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரகாந்தன் சதுஸன் என்ற 16 வயது மாணவனே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த மாணவன் பெரியகல்லாறு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

### ஞானசார தேரருக்கு....

கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூரகல விகாரை தொடர்பில் இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் ஞானசார தேரர் வெளியிட்ட கருத்து, தேசிய நல்லிணக்கம் மற்றும் மத நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவித்தது என்று அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் இரண்டு குற்றப்பத்திரங்களிலும் ஞானசார தேரர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்தார்.

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பொலிஸில் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை மையப்படுத்தி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஞானசார தேரருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் மேற்படி இரண்டு குற்றப்பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.



# கிளிநொச்சியில் விவாசாயிகள் கௌரவிப்பு

(த.சுபேசன்)

கிளிநொச்சியில் 2 கே அக்றோ தயாரிப்பு நிறுவனத்தின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்து கொண்டு நிறுவனத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும், யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராம நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது விசேட அம்சமாக விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

அதன் ஓர் அங்கமாக திருவையாறு ஜம்போ நிலக்கடலை சங்கத்துக்கு ஒரே தடவையில் அதிக நிலக்கடலையை உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் திருவையாறு ஜம்போ நிலக்கடலை சங்கம் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து தற்போதுவரை பங்களிப்புச் செய்தோரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விவசாய நவீனமயமாக்கல் திட்டப் பணிப்பாளர், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர், விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் நாட்டில் அதிகரிப்பு

கை, கால் மற்றும் வாய் வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள வருகிறது என்று பொரளை சிறுவர் வைத்திய சாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு வாயில் சிவப்பு புள்ளிகள் அல்லது மூட்டுகளில் வெள்ளை நீர் கொப்புளங்கள், காய்ச்சல் ஏற்பட்டால் இது ஒரு வைரஸ் நோய் என்பதனை பெற்றோர்கள் அவதானிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நோய் அறிகுறிகள் தென்படும் போது பெற்றோர்கள் தங்களது குழந் தைகளை பாடசாலை, முன்பள்ளி மற் றும் பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புவதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கை, கால் மற்றும் வாய் வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நோய் தொற்று சுமார் மூன்று நாள்களுக்கு நீடிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முட்டாள்தன மருத்துவம்

நோய்க்கு - பிணிக்கு - காரணம் யாது என்று தெரிந்திருந்தும், அதற்கு மருத்துவம் செய்யாமல், அந்த நோய் வெளிப்படுத்தும் குணங்குறிக்கு மருத்துவர் செய்யும் வைத்தியரை என்ன என்று சொல்வது? மெத்தப் படித்த முட்டாள் மருத்துவர் என்று கூறலாமா?

வங்குறோத்தான நாட்டின் பொருளாதாரப் பிணியைத் தீர்க்க வந்த ஆபத்பாந்தவர் என்று தம்மை காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கூட தாமும் இந்த வகையறா என்றுதான் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி, முழு நாட்டையுமே வங்குறோத்தான நிலைக்குத் தள்ளிய காரணி எது என்பதை ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் மீண்டும் மீண்டும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டு கூறுகின்றனர்.

ஆனால் அந்த மூலக் காரணிக்கு வைத்தியம் செய்யாமல் - மருந்து கொடுக்காமல் - அந்த நோய் வெளிப்படுத்தும் குணங்குறிக்கு மருத்துவம் செய்கின்றமை சரியான சிகிச்சை அல்ல.

காலி கராபிட்டியவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தெற்காசிய வலயத்தின் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலையாகக் கருதப் படும் ஜேர்மன்– இலங்கை நட்புறவு புதிய பெண்கள் வைத்தியசாலையை மக்களின் பாவனைக்காக நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி நாட்டின் நோய் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

''சுகாதாரத் துறையின் சவால்கள் அதிகரித்துள்ளன. இந்த நாட்டில் கல்வி முறையும் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும். இதுவரை, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான மூலதனச் செலவு குறைவாகவே ஒதுக்கப்பட்டது. முன்னர் சுகாதாரம் மற்றும் கல்விக்கு போதுமான பணம் செலவிடப்படவில்லை. யுத்தத்திற்குப் பெருமளவு பணம் ஒதுக்க வேண்டியேற்பட்டதே அதற்குக் காரணம். இதற்காக நாம் அதிக அளவு கடன் வாங்கியிருப்பதால், அதிக பணத்தை வட்டியாகச் செலுத்த நேரிட்டுள்ளது.'' - என்று பொருளாதார நோய் - பிணி - நாட்டைப் பீடித்திருக்கின்றமைக்கான காரணத்தை அவரே வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரான வஜிர அபேவர்தனவும் இது குறித்துப் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

''ஓரிரு சம்பவங்களால் இந்த நாடு வங்குறோத்தாகிவிடவில்லை. இந்த நிலை நீண்ட கால காரணங்களால் உருவாகியது. நாட்டில் நீண்ட காலமாக யுத்தம் இடம்பெற்றது. யுத்தத்திற்குத் தேவையான அனைத்து ஆயுதங்களும் நாட்டின் நிதியின் மூலமே கொள்வனவு செய்யப்பட்டன. அதன்படி முப்பது வருடங்கள் யுத்தம் செய்தோம். முப்பது வருடகால யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்தது.'' - என்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆக, நாட்டின் பொருளாதாரம் வங்குறோத்து நிலையை எட்டும் மோசமான கட்டத்துக்குப் போனமைக்கு பிரதான காரணம் 30 வருட யுத்தம்தான் என்பதை, நாட்டை அந்த மோசமான நிலையில் இருந்து பிணையெடுக்க வந்திருக்கும் மீட்பர் தாமே என்று தம்மை வெளிக்காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டின் ஆபத்பாந்தவர் அவரே என்று அவரைப் போற்றும் அவரது தரப்பினரும் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டை மீட்பதற்கான தனது முதலுதவி சிகிச்சைகளை ஆபத்பாந்தவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கனகச்சிதமாக செய்துவிட்டார், அவை வெற்றியளிக்கத் தொடங்கி விட்டன, இனி அடுத்த கட்ட நடவடிக்கைகள்தான் எஞ்சியிருக்கின்றன, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாகுவாரானால் மிகுதி சிகிச்சையும் வெற்றிகரமாக ஒப்பேற்றப்படும் என அவரது தரப்பில் பீற்றப்படுகின்றது.

நாட்டில் இந்த இந்த மோசமான பொருளாதார வங்குறோத்து நிலை உருவாகக் காரணமான யுத்தம் இங்கு ஏற்பட்டமைக்கு இன்னும் மருத்துவ சிகிச்சை ஆரம்பிக்கப்படவே இல்லை.

யுத்தத்தை இராணுவ ரீதியில் தோற்கடித்து விட்டதால் அத்தகைய பிரச்சினை இனி வராது என்ற கற்பிதத்தில் - அதையும் தாண்டி, பேரினவாத மேலாதிக்க மேலாண்மைப் போக்கில் - யுத்த நோய்க்குக் காரணமான மூலத்தை புறமொதுக்கி, நாட்டின் பொருளாதார நெருக்கடி என்ற குணங்குறிக்கு சிகிச்சை அளிக்கின்றார் மெத்தப் படித்த முட்டாள்தனமான இந்த மருத்துவர்.

நாட்டில் ஆழ ஊடுருவி அடங்கிக் கிடக்கும் அந்த அடிப்படையான பிரச்சினை, மீண்டும் ஒரு வடிவத்தில் தன் கைவரிசையை காட்டும் சூழல் ஏற்பட்டால் இந்த முட்டாள்தனமான மருத்துவரின் சீத்துவம் அப்பட்டமாக அம்பலமாகும்.

# லைக்கா ஞானம் அனுசரணையில் சகோதரர்களின் துடுப்பாட்டப் போர்!

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பிரதான அனுசரணையில் ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி நாளை 29, நாளை மறுதினம் 30 ஆம் திகதிகளில் ருகுணு பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

சகோதரர்களின் போர் எனப் பெயரி டப்பட்டுள்ள துடுப்பாட்டப் போட்டியில் 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டி முதல் நாளில் நடைபெறவுள்ளது. தொடர்ச்சியாக இரண்டாவது தினத்தில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான நட்பு ரீதியான போட்டியும் இடம்பெறும்.

அத்துடன் பல்கலைக்கழக மாணவி கள் பங்கெடுக்கும் மகளிர் துடுப்பாட்டப் போட்டியும், 20 பந்துப் பரிமாற்றங் களைக் கொண்ட இரு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்த அணியு டனான போட்டியும் நடைபெறவுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்களிடையே நட்புறவை ஏற்படுத்துவதன் ஊடாக சமூக நல்லிணக்கத்துக்கான முயற்சிக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிகாட்டலில் இந்தத் துடுப்பாட்ட போட் டிக்கான பிரதான அனுசரணை வழங்கப்படுகிறது. வெற்றி பெறும் அணிக்கான லைக்கா வெற்றிக் கிண் ணம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் அல்லிராஜா நிறைவகம் ஊடாக மேற் கொள்ளப்படும் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம், உருகுணு பல்கலைக்கழகத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.



# வேத்துச்சேனைக் கிராம மக்களின் குடி தண்ணீர் பிரச்சனைக்குத் தீர்வு!

## சாணக்கியன் எம்.பி. நடவடிக்கை



மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வேத்துச்சேனை கிராம மக்கள் இதுவரை காலமும் தமக்கு உரிய சுத்த மான குடிநீரின்றி மிகவும் இன்னலுக்கு மத்தியில் தமது வாழ்வைக் கழித்து வந்தனர். இதனால் அந்தக் கிராமத்தில் பலர் நோய்களுக்கு ஆளாகியுள்ளனர் அங் குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக அந்தக் கிராம மக்கள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக் கியனின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மக்களின் கோரிக்கைய ஏற்று துரித மாகச் செயற்பட்ட நர்டாளுடன்ற உறுப் பினர் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடரப்பு கொண்டு வேத்துச் சேனைக் கிராம மக்களுக்குரிய குழாய் மூலமான சுத்தமான குடி தண்ணீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அந்தக் கிராமத்துக் குக் குடி தண்ணீர் வழங்குவதற்கு உரிய ஆரம்ப கட்ட வேலைத் திட்டங்கள் உத்தி யோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பி னர் இரா.சாணக்கியனின் பிரத்தியேக செயலாளர் விமலனாதன் மதிமேனன், இலங்கை தேசிய நீர்வழங்கல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிர்மான பொறியியல் உதவியாளர் இளையதம்பி பிரதீபன், இலங்கை தமிழரசுக் கட்சியின் போரதீவுப்பற்று வட்டாரக்கிளை உப தலைவர் மகேஸ்வரன் கோபிநாத், பாலையடிவட்டை இணைப்பாளர் தங்க ராசா ஜெயசீலன், போரதீவு வட்டார இணைப்பாளர் பெரியதம்பி பிரதீப்குமார் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதுவரை காலமும் தாம் சுத்தமாகக் குடி தண்ணீர் இன்றி வாழ்ந்து வந்ததாகவும், தமது கோரிக்கையை ஏற்றுத் தமக்கு உரிய குடி தண்ணீர் இணைப்புக்களை எற்படுத்தித் தந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கும் இலங்கை தேசிய நீர்வழங்கல் அதிகார சபையினருக்கும் அந்தப் பகுதி மக்கள் தமது நன்றியை இதன்போது தெரிவித்தனர்.

# திருமலை மாணவர் சிரமங்களை குறைக்க நடவடிக்கை எடுங்கள்!

## தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை

(அபு அலா, ஹஸ்பர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்ட பாட நெறிகளைப் பின்பற்றும் திருகோணமலை மாவட்ட மாணவர்களது சிரமங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தென்கிழக்குப் பலக்லைக்கழக உப வேந்தரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உப வேந்தருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்ட மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் நேரடி வகுப்புகள்



ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. வார இறுதி நாள்களில் ஒழுங்கு செய்யப்படும் இந்த வகுப்புகள் அடிக்கடி நடத்தப்படுவதால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் இவ் வகுப்புகளில் கலந்து கொள்வதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே ஒரு நாள் தங்கி இருந்து வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக இதனால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு நிகழ்நிலையில் (ஒன்லைன்) வகுப்புகள் நடத்த அல்லது திருகோணமலை மாவட்டத்தில் ஒரு கற்கை நிலையத்தை ஒழுங்கு படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.– என்றுள்ளது.

# பெண்ணுடன் ஹோட்டலில் இருந்த பிக்கு ஒருவர் பொலிஸாரால் கைது!

பெண் ஒருவருடன் ஹோட்டல் அறையில் தங்கியிருந்த பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தியதலாவ பிரதேசத்தில் அமைந் துள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்தே குறித்த பௌத்த பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் குறித்த பௌத்த பிக்குவை கைது செய்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பௌத்த பிக்கு பொரளந்த பகுதியில் அமைந்துள்ள விஹாரை ஒன்றைச் சேர்ந்தவர் எனவும் விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

46 வயதான பௌத்த பிக்கு, 40 வயதான பெண் ஒருவருடன் ஹோட்டல் அறையில் தங்கியிருந்த நிலையில்



கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாசகம் செய்துவரும் குழந்தைகளின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை எட்டியது

நாடு முழுவதும் யாசகம் செய்யும் குழந்தைகளின் எண்ணிக்கை 20,000 முதல் 30,000 வரை உள்ளது என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புள்ளி விவரவியல் மற்றும் தரவுக் கற்கைப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள, நாடு முழுவதும் உள்ள குழந்தைகளின் தற்போதைய நிலைமை குறித்து அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும் முகமாக குருநாகல், அநுராதபுரம், அம்பாறை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் குறிப்பிட்ட அரசு சாரா அமைப்பு நடத்திய முந்தைய ஆய்வுகளின் மூலம், நாடு முழுவதும் 15,000 யாசகம் பெறும் குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



எவ்வாறாயினும், தெருவோர குழந்தைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலைமையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறுவர்களை கொண்டு யாசகம் செய்வது சட்டப்படி குற்றமாகும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சானக உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

# பொத்துவில் பிரதேச செயலகம் தேசிய ரீதியில் முதலாமிடம்!

(அபு அலா)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சிறுவர் ஓய்வூதிய திட்ட ஆட்சேர்ப்பின் மூலம், பொத்துவில் பிரதேச செயலகம் 25 லட்சத்து 59 ஆயிரத்து 300 ரூபா பணத்தை சேமிப்பு தொகையாக வைப்புச் செய்து தேசிய ரீதியில் முதல் நிலையைப் பெற்றுக்கொண்டது.

இதனை பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று (27) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, பொத்துவில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயிலுக்கு நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட அரச அதிபர் வழங்கினார்.



கடந்த வருடம் (2023) நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சிறுவர் ஓய்வூதியத் திட்ட ஆட்சேர்ப்பின் மூலம், பொத்துவில் பிரதேச செயலகம் 648 இலக்கையும், 4152 பேரை இணைத்து 25 லட்சத்து 59 ஆயிரத்து 300 ரூபா சேமிப்பு பணத்தை வைப்புச் செய்து 640.74 சதவீதம் அடிப்படையில் செயற்பட்டுத் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய ரீதியாக மூன்றாவது தடவையாகவும் சம்மாந்துறை பிரதேச செயலகம் தெரிவானது

(சர்ஜுன் லாபீர்)

சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய பங்களிப்புக்கான தேசிய மட்ட அடைவை தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் சம்மாந்துறை பிரதேச செயலகம் தெரிவு செய்யபபட்டுள்ளது.

இதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவின அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று (27) நடைபெற்ற பிரதேச செயலாளர்கள் மாநாட்டில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவுக்கு நினைவுச் சின்னம் வழங்கப் பட்டது.

# இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் காரைதீவில் குடும்ப சுகாதார நிலையம்

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் நாளை (29) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு குடும்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிலையமானது பொது மக்களுக்காக முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை ஐந்து மணியில் இருந்து ஆறு மணி வரை யான காலப் பகுதியில் இங்கு இல வசமாக சுகாதார சேவை இடம் பெற வுள்ளது.

கல்முனை ஆதாரவைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் இரா. முரளீஸ்வரனின் ஒத்துழைப்புடன் காரைதீவு வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்கள் தொண்டரடிப்படையில் பணியாற்ற முன்வந்துள்ளனர்.

இதேவேளை, நேற்று (27) புதன்கிழமை மாலை உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் துணை பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போசாரானந்தை மகராஜ் நேற்று மாலை காரைதீவு க்கு விஜயம் செய்தார்.

சாரதா சிறுமியர் இல்லத்தை பார்வையிட்டதோடு அங்கு புதிதாக திறந்து வைக்கப்பட இருக்கு குடும்ப சுகாதார நிலையத்தையும் அவர் பார்வையிட்டார்.



# கல்முனையில் நீதி கோரி 4ஆவது நாளாக போராட்டம்

( வி.ரி.சகாதேவராஜா)

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நீதி கோரி கல்முனையில் இன்று (28) வியாழக் கிழமை நான்காவது நாளாக பொது மக்கள் போராட்டம் தொடர்கிறது.

பெரும் எண்ணிக்கையில் பொது மக்கள் அடையாள அமைதிப் கூடி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் கடந்த மூன்று தினங்க ளாக எந்த ஒரு தமிழ் அரசியல் வாதி யும் தங்களை பார்க்க வரவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்ற னர்.

நாம் இதற்குத் தானா வாக்களிப்பது? எங்களுக்கு உரிமை பிரச்சினை ஏற்படு கின்றபோது இப்படி இவர்கள் பாரா முகமாக இருப்பது வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அரச சேவையைப் பெறும் தங்களின் அடிப்படை உரிமையை பறிக்கும் இனவாத அதிகார அத்துமீறலுக்கு அரசு இடமளிக்ககூடாது. இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் கல்முனை தெற்கு பிரதேச செயலா ளருக்கும் இனவாத அரசியல்வாதிக ளுக்கும் தங்கள் கண்டனங்களை மக்கள் தெரிவித்து வருகின்றனர்.




# சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழா நாளை சிட்னியில

(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலை நாளை (29) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியா சிட்னி மாநகரில் திறந்துவைக்கப் படவுள்ளது.

சிட்னி நேரப்படி மாலை 4 மணியள விலும், இலங்கை நேரப்படி காலை 10 மணி மணியளவிலும் இந்தத் திறப்பு விழா இடம்பெறும்.

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் தலைவரும், உதயசூரியன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான பிரபல பரோபகாரி நாகமணி குணரெத் தினம் கிழக்கு உதயசூரியன் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளா ருக்கு இந்த சிலையை நிறுவியுள்ளார்.

சுவாமிகள் பிறந்த இலங்கை திரு நாட்டுக்கு வெளியே முதல் தடவையாகக் கடல் கடந்த நாடுகளில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவும் முதல் வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

இந்தச் சிலை திறப்புவிழாவுக்கு உலக நாடுகளிலிருந்து குறிப்பாக இந் தியா, லண்டன், கனடா, சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளில் இருந்து பல பேராளர்கள் சிட்னிக்கு வருகை தந்துள்ளனர்.


"சிட்னியில் அடிகளார் படிவமலர்" எனும் சிறப்பு நூலும் வெளியிட்டு வைக் கப்படவுள்ளது.

# ‘யாழ்’ நூல் படைத்த சுவாமி விபுலாநந்தருக்கு சிட்னியில் சிலை திறப்பு!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

தமிழரின் இசை, நடனம், நாடகம் தொடர்பான பல்வேறு நுட்பங்கள் குறித்த விவரங்களை உள்ளடக்கிய தமிழ்க் காப்பிய நூல் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை தமிழ் இசை நுணுக்கங்கள் குறித்த சில விளக்கங்களைத் தந்தாலும் அந்த இசை குறித்து முழுமையாக அறிந்து கொள்வதற்கு இவை போதுமானதாக அமையவில்லை.




சிலப்பதிகாரத்தை நன்கு கற்றிருந்த விபுலாநந்தர் அந்த நூலின் சொல்லப்பட்டிருந்த இசை நுணுக்கங்கள் குறித்தும், பல்வேறு தமிழ் இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் பின்னர் வழக்கற்றுப் போய்விட்ட ‘யாழ்’ என்னும் இசைக் கருவி குறித்தும் அறிய ஆர்வம் கொண்டார்.

விபுலாநந்தர் கணிதம், இயற்பியல் ஆகியவற்றிலும் விற்பன்னராக இருந்ததால், இந்த ஆய்வுக்கு அவை உதவியாக அமைந்தன.

**பழந்தமிழரின் இசை நுட்பங்கள்**

பழந்தமிழரின் இசை நுட்பங்கள், யாழ் ஆகியன பற்றி ஆராய்ச்சி முறையாக விவரிக்கும் ஒரு முதல் நூல் யாழ் நூலாகும்.

பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில் யாழ், பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ், சீறி யாழ், சகோட யாழ் என்பன பற்றி யாழ் நூல் கூறுகின்றது.

இந்த நூலை இயற்றியவர் ஈழத்தின் கிழக்கில் அவதரித்த சுவாமி விபுலாநந்தர் ஆவார். சுவாமி விபுலாநந்தரின் உருவச்சிலை நாளை சிட்னியில் திறக்கப்படுகிறது.

**மூன்று பதிப்பு கண்ட ‘யாழ்’ நூல்**

யாழ் நூல் இதுவரை மூன்று பதிப்புகளாக வெளிவந்துள்ளன. முதற் பதிப்பு 1947 இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தால், கரந்தை கூட்டுறவுப் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் பின்னர் 1974 இல் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது பதிப்பையும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரே வெளியிட்டனர்.

பல அமைப்புக்களும், தனியாரும் வழங்கிய நிதியுதவி இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த இரண்டாம் பதிப்பில் க. வெள்ளைவாரணர் தமிழில் வழங்கிய முன்னுரை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், கொழும்புப் பல்கலைக்கழக இதழில் வெளியான விபுலாநந்தரின் “ஆயிரம் நரம்பு யாழ்” என்னும் ஆங்கிலக் கட்டுரையும் இரண்டாம் பதிப்பில் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டது.

அதன் பின்னர், சில புலம்பெயர்ந்து வாழும் ஆர்வலர்களதும், பிறரதும் துணையுடன் திருநெல்வேலி யாதுமாகி பதிப்பகத்தின் சார்பில் யாழ் நூலின் மூன்றாம் பதிப்பு 2003 இல் வெளியானது. இந்தப் பதிப்பில் நா. மம்மதுவின் கருத்துரை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அண்ணாமலை பல்கலைக் கழக தமிழ்த் துறை தலைவர்**


விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குத் தலைவராக இருந்த காலத்தில், கருநாடக இசையின் அமைப்பு, நுணுக்கங்கள் ஆகியவை பற்றி அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

1936 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் இடம்பெற்ற இவரது பேச்சொன்றில், பழந்தமிழருடைய யாழ்கள் பற்றி விளக்கியதுடன் அவற்றின் அமைப்பையும் படங்கள் மூலம் விளக்கினார். இவரது ஆய்வுகளில் ஆர்வம் கொண்ட அறிஞர்கள் பலரும் இவரது ஆய்வுகளை நூலாக வெளியிடுமாறு ஊக்கம் கொடுத்தனர். எனினும், வெவ்வேறு காலகட்டங்களில் இவரது பணிகள் காரணமாக இந்த ஆய்வு தடைப்பட்டிருந்தது.

இந்தியாவில் இமயமலைச் சாரலில் பிரபுத்த பாரதம் என்னும் ஆங்கில நூலுக்கு ஆசிரியராக இருந்தபோதும், பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய போதும் இந்த ஆய்வை நிறைவு செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஆய்வுக் காலத்தில், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய தமிழ்ப் பொழிலிலும், மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த செந்தமிழ் என்னும் இதழிலும் இவ்வாய்வுடன் தொடர்புள்ள பல கட்டுரைகள் வெளிவந்தன.





அத்துடன் திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள வானொலி நிலையங்களில் இது தொடர்பான விபுலானந்தரின் பேச்சுக்கள் இடம்பெற்றன. மேற்குறித்த கட்டுரைகளிலும், பேச்சுக்களிலும் இருந்த விடயங்களும் கருத்துக்களும் யாழ் நூலில் இடம்பெற்றுள்ளன.





# மட்டக்களப்பு ஆயித்தியமலையில் சத்துமா உற்பத்தி நிலையம் திறப்பு!

(பழுவூரான்)

அரசால் கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்பும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசப் பெண்களின் நிலைபேறான அபிவிருத்திக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக நியூசிலாந்து வெளிநாட்டு அமைச்சின் நிதி உதவியின் கீழ் ஆயித்தியமலையில் 80 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சத்துமா உற்பத்தி நிலையம் மற்றும் அதனோடு இணைந்த வெதுப்பாக தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா நேற்று புதன்கிழமை (27) மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்யானந்தி தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜெஸ்டீனா முரளிதரன் கலந்து கொண்டு புதிய உற்பத்தி நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

இதன்போது அங்கு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும் பார்வையிட்டார். இந்த திறப்பு விழா நிகழ்வுக்கு சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஆடித் ஹோஸ் மற்றும் பிரதேச செயலக உயர் அதிகாரிகள், ஆயத்தியமலை பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள், பிரதேச பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பின் தங்கிய பிரதேச மக்களின் ஆரோக்கியத்தைக் கட்டி எழுப்பும் முகமாக குறைந்த விலையில் காலடியிலே தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைப் பெறும் பொருட்டே இந்த புதிய உற்பத்தி நிலையமும், வெதுப்பாகத் தொகுதியும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காலநிலை மாற்றத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாக்கும் விசேட திட்டம் மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

நியூசிலாந்து வெளிநாட்டு அமைச் சின் நிதியுதவியின் கீழ் சிறுவர் நிதியத் தின் ஊடாக யுனிட்டி லங்கா அமைப்புடன் இணைந்து காலநிலை மாற்றத் திலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் வகையிலான விசேட திட்டமொன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் மற்றும் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (27) மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் சிறுவர் நிதியத்தின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஆடித் ஹோஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜெஸ்டீனா முரளிதரன் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக சிறுவர் நிதியத்தின் வியாபார அபிவிருத்திக்கான பணிப்பாளர் டினன்த தம்பாவிற்ற, கிரான் பிரதேச செயலாளர் க.சித்திர வேல், புனானை 23 ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் ஜென ரல் நிலாந்த பிரேமரத்ன, முல்லைதீவு மாவட்ட முன்னாள் அரச அதிபர் கே.விமலநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாற்றமடைந்துவரும் கால நிலை யில் இருந்து மிகவும் வறிய நிலை யிலுள்ள சிறுவர்களைப் பாதுகாக்கும் வகையில்





இந்தத் திட்டம் முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

குளங்கள் அபிவிருத்தி செய்யப்படு வதுடன், சிறுவர்களுக்கான சுத்தமான குடி தண்ணீரை உறுதிப்படுத்தல், சுகாதாரததை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் தேவை களை உறுதிப்படுத்தல் என பல்வேறு வேலைத் திட்டங்கள் இதன் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேச செயலகப் பிரிவுகளான கிரான் மற்றும் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுகள் இதன் கீழ் தெரிவுசெய்யப்பட்டு காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப சிறுவர்களைப் பாதுகாக்கும் வகையில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.கவினர் மீது பொய் வழக்கு பதிந்த நீலகிரி பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை

## எடப்பாடி பழனிசாமி எச்சரிக்கை



"அ.தி.மு.கவினர் மீது உதகை பொலிஸார் பொய் புகார் பதிவு செய்துள்ளனர். அதன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"நீலகிரி மக்களவைத்தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் லோகேஷ் தமிழ் செல்வன் உள்ளிட்ட கட்சி தொண்டர்கள் கடந்த 25 ஆம் திகதி உதகை காபி ஹவுஸ்-ல் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்று வேட்பு மனு தாக்கல் செய்ய நீலகிரி மாவட்ட பொலிஸாரிடம் உரிய அனுமதி பெற்றிருந்தனர்.

அதன்படி, 25 ஆம் திகதி ஊர்வலம் செல்வதற்கு தயாராக இருந்த நிலையில், உதகை பொலிஸார் வேண்டுமென்றே பல்வேறு தடுப்புகளைப் போட்டு அ.தி.மு.கவினர் ஊர்வலம் செல்ல அனுமதிக்காமல் தாமதப்படுத்தினர். பிறகு 1 மணிக்குள் வேட்பு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று பொலிஸாரிடம் கட்சி நிர்வாகிகள் தொடர்ந்து வலியுறுத்திய பிறகு, பொலிஸார் அ.தி.மு.க. வேட்பாளரையும், தொண்டர்களையும் பிற்பகல் 12.30 மணிக்கு ஊர்வலம் செல்ல அனுமதித்துள்ளனர்.

பின்னர், தேர்தல் விதியின்படி 5 பேர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு பிற்பகல் 12.55 மணிக்கு வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளே செல்ல முடிந்தது. பொலிஸார் தேவையின்றி அ.தி.மு.க. ஊர்வலம் செல்ல காலதாமதம் செய்ததை எதிர்த்து, தொண்டர்கள் அமைதியான முறையில் வீதி மறியலில் ஈடுபட்டு தங்களது எதிர்ப்பைக் காட்டினர். ஆனால், உதகை பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்தி கும்பலை கலைத்துள்ளனர்.

பொலிஸாரின் தவறான நடவடிக்கைகளை கட்சி வழக்கறிஞர்கள் இந்திய தேர்தல் ஆணையம், மாவட்டத் தேர்தல் அலுவலர் ஆகியோரிடம் 26 ஆம் திகதி புகார் தெரிவித்தனர். ஊர்வலம் செல்ல காலதாமதம் செய்ததற்கு, நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.தி.மு.கவினரிடம் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

ஆனால், உதகைடவுன் பொலிஸார் நீலகிரி மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் கப்பச்சி வினோத் உள்ளிட்ட 20 பேர் மீது, பல நபர்களிடம் பொய் புகார்களைப் பெற்று பிணையில் வெளி வர முடியாதபடி வழக்கு பதிவு செய்துள்ளனர். அதற்கு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறேன். தவறிழைத்த பொலிஸ் மீது நடவடிக்கை எடுப்பதுடன், தி.மு.கவுக்கு ஆதரவாக பொய்புகார் பதிவு செய்த உதகை பொலிஸ் மீது சட்டப் படியான நடவடிக்கைகளை அ.தி.மு.க. மேற்கொள்ளும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# மண்டியா தொகுதியை ஒதுக்க பா.ஜ.க. மறுப்பு: சுயேச்சையாக களமிறங்குகிறார் நடிகை சுமலதா



கர்நாடக மாநிலம் மண்டியா தொகுதியின் சுயேச்சை எம்.பியும் நடிகையுமான சுமலதாவுக்கு மீண்டும் அந்த தொகுதியை ஒதுக்க பா.ஜ.க. மேலிடம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இதனால் அதிருப்தி அடைந்துள்ள அவர் சுயேச்சையாக போட்டியிடலாமா? என தனது ஆதரவாளர்களிடம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரபல கன்னட நடிகர் அம்பரீஷ், மண்டியா மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு 3 முறை வெற்றி பெற்றுள்ளார். இதில் ஒரு முறை ம.ஜ.த. சார்பிலும், 2 முறை காங்கிரஸ் சார்பிலும் அவர் எம்.பியாக தேர்வானார். அவரது மறைவுக்கு பிறகு மனைவி சுமலதா காங்கிரஸ் சார்பில் மண்டியாவில் களமிறங்க விருப்பம் தெரிவித்தார்.

ஆனால் காங்கிரஸ் அவருக்கு ஆசனம் வழங்காததால் சுயேச்சையாக போட்டியிட்டு 1.25 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதையடுத்து பா.ஜ.க. மேலிடம் சுமலதாவிடம் தங்களது கட்சியில் இணையுமாறு வலியுறுத்தியது. ஆனால் அவர் பா.ஜ.கவில் சேராமல், தொடர்ந்து அக்கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டார்.

இந்த நிலையில் கடந்த மாதம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து மண்டியா தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட விரும்புகிறேன் என்று அவர் கூறினார். அதனை பரிசீலிகின்றோம் என அவர் கூறியதால், சுமலதாவும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தார்.

ஆனால் பா.ஜ.க. மேலிடம் மண்டியா தொகுதியை தங்களது கூட்டணியில் இடம்பெற்றுள்ள முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சிக்கு ஒதுக்கியுள்ளது. அங்கு முன்னாள் முதல்வர் குமாரசாமி அல்லது அவரது மகன் நிகில் கவுடா போட்டியிட இருகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் மண்டியா தொகுதியை பா.ஜ.க. தர மறுத்ததால் சுமலதா கடும் அதிருப்தி அடைந்துள்ளார். இதனால் கடந்த தேர்தலை போல மீண்டும் சுயேச்சையாக களமிறங்கலாமா? என தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

# அரவிந்த் கேஜ்ரிவாலின் தடுப்புக்காவல் நிறைவு

## டில்லி உயர் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்



டில்லி முதல்வரும், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கேஜ்ரிவாலின் தடுப்புக்காவல் இன்று நிறைவடைகின்றது.

இந்த நிலையில், டில்லி உயர் நீதிமன்றத்தில் அவர் இன்று ஆஜர் படுத்தப்படுகின்றார்.

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் ஆம் ஆத்மி கட்சி 100 கோடி ரூபா ஆதாயம் அடைந்தார் என டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை அமலாக்கத் துறை கடந்த 21 ஆம் திகதி கைது செய்தது. அவரை இன்று வரை அமலாக்கத் துறை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து அமலாக்கத் துறையால் தான் விசாரணை எதுவுமின்றி கைது செய்யப்பட்டுள்ளேன் எனவும் இந்த கைது நடவடிக்கை தனது அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது என்றும் குறிப்பிட்டு கேஜ்ரிவால் நேற்று டில்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், அமலாக்கத் துறையின் கைது நடவடிக்கையில் இருந்து இப்போதைக்கு எந்த நிவாரணமும் அளிக்க முடியாது என்று கூறியிருந்தது. மேலும் இது தொடர்பாக அமலாக்கத் துறை ஒரு வாரத்தில் பதில் அளிக்கவும் உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில், அரவிந்த் கேஜ்ரிவாலின் தடுப்புக்காவல் இன்று முடிவடையும் நிலையில், இன்று அவரை அமலாக்கத்துறை டில்லி உயர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளது.

மேலும், கேஜ்ரிவாலை டில்லி முதல்வர் பதவிலிருந்து நீக்கக் கோரி தொடரப்பட்ட பொதுநல வழக்கை டில்லி உயர் நீதிமன்றம் இன்று விசாரிக்கிறது. நீதிபதிகள் மன்மோகன் மற்றும் மன்மீத் பிரீதம் சிங் அரோரா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரிக்க உள்ளது.

# அடுத்த மாதம் மோடி தமிழகத்தில் பிரச்சாரம்



தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள பிரதமர் மோடி அடுத்த மாதம் தமிழகம் வர இருக்கின்றார் என கூறப்படுகிறது.

தமிழகத்தில் பிரச்சாரம் சூடுபிடிக்க தொடங்கி இருக்கிறது. எனவே, தமிழகத்தில் மோடி பிரச்சாரம் மேற்கொள்ளும் வகையில் சுற்றுபயணத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், குறிப்பாக டெல்டா மாவட்டங்கள், இராமநாதபுரம் உள்ளிட்ட தொகுதிகளுக்கும், அதேபோல், கூட்டணிகட்சித் தலைவர்கள் வேட்பாளர்களாக களமிறங்கும் தொகுதிகளிலும் மோடி பிரச்சாரம் செய்ய இருக்கிறார் என தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி, தமிழகத்துக்கு 3 முறை மோடி வருவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும், ஆனால், அவரது பயணத்திட்டங்கள் குறித்து இதுவரை எந்த ஒரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை என்றும் பா.ஜ.க. நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம், நட்டா, அமித் ஷா உள்ளிட்ட பா.ஜ.க. தேசிய தலைவர்களும் தமிழகத்தில் பிரச்சாரம் மேற்கொள்ள வருவார்கள் எனவும் பா.ஜ.கவினர் தெரிவித்துள்ளனர்.

# தேர்தலில் போட்டியிட என்னிடம் பணம் இல்லை

## நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு



தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு தன்னிடம் பணம் இல்லை என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பரிசீலிக்குமாறு பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா தன்னிடம் தெரிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேர்தலில் போட்டியிடுவது குறித்து பரிசீலிக்குமாறு எங்களது கட்சி சார்பில் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. நானும் அது குறித்து 10 நாள்கள் வரை யோசித்துப் பார்த்தேன். பின்னர் போட்டியிட விரும்பவில்லை என எனது முடிவை தெரிவித்தேன். தமிழகம் அல்லது ஆந்திராவில் இருந்து போட்டியிட எனக்கு பரிந்துரை வந்தது. பா.ஜ.க. தலைவர் ஜெ.பி.நட்டா இதனை முன்மொழிந்தார். இருந்தும் நான் போட்டியிடவில்லை என சொன்னேன்.

மேலும், என்னிடம் தேர்தலில் போட்டியிடும் அளவுக்கான பணம் இல்லை. அதோடு தமிழகம் அல்லது ஆந்திராவில் போட்டியிட்டால் மதம், சாதி போன்றவை வெற்றிக்கான காரணிகளில் பிரதானமானதாக பார்க்கப்படும். அதனால் நான் தேர்தலில் போட்டியிடவில்லை. எனது முடிவை கட்சியும் ஏற்றுக் கொண்டுள்ளது.” – என்றார்.






# அமெரிக்காவில் கத்திக்குத்து; 4 பேர் பலி, சந்தேகநபர் கைது

அமெரிக்காவில் - ராக்போர்ட் இல்லினாய்ஸ் பகுதியில் கத்தி குத்து தாக்குதலுக்கு இலக்காகி 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், இந்த சம்பவத்தில் 7 பேருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன என ராக்போர்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு நேரத்தின்படி பகல் 1. 14 மணிக்கு முன்னதாக இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்த கொலைக்கான காரணம் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# மாலைதீவு குடிதண்ணீர் பிரச்சினை; உதவிக்கரம் நீட்டுகின்றது சீனா



கடும் குடிதண்ணீர் பஞ்சத்தால் அவதிப்பட்டு வந்த மாலைதீவுக்கு திபெத் பனிமலைகளில் இருந்து 1,500 தொன் குடிதண்ணீரை சீனா வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் மாலைதீவு அரசு அறிவித்துள்ளது.

இந்த தீர்மானமானது, சீனாவின் திபெத் தன்னாட்சி மண்டல தலைவர் யான் ஜின்ஹாய், மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவை கடந்த நவம்பரில் சந்தித்த போது எடுக்கப்பட்டதாக மாலைதீவின் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவினால் வழங்கப்பட்ட குடிதண்ணீரானது, திபெத்தில் உயர்ரக தயாரிப்பு நிறுவனங்கள் குடிதண்ணீர் உற்பத்தி செய்கின்றன, சுத்தமான, தெளிவான, அதிக கனிமங்கள் கொண்ட தண்ணீர் திபெத் பனிப்பாறைகளில் இருந்து பெறப்படுகிறது.

சீனாவுக்கு ஆதரவான அரசு மாலைதீவில் தெரிவானது முதல், சீனா பல்வேறு வகைகளில் மாலைதீவுக்கு உதவி வருகிறது.

அத்தோடு, சீனா அபாயகரமில்லாத ஆயுதங்கள் மற்றும் ஆயுத பயிற்சியை மாலைதீவுக்கு வழங்கவிருப்பதாக மாலைதீவு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.




# அமெரிக்க பாலம் இடிந்து விபத்து; 3 நாள்களின் பின் சடலங்கள் மீட்பு

அமெரிக்காவில் பால்டிமோர் நகர இரும்புப் பாலம் இடிந்து விழுந்ததில் நீரில் மூழ்கியவர்களில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என மேரிலாண்ட் மாகாண நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலாண்ட் மாகாணம், பால்டிமோர் நகரில் படாப்ஸ்கோ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இரும்புப் பாலமானது, அந்த நகர துறைமுகத்தின் மிக முக்கிய போக்குவரத்து வழித்தடமாக உள்ளது.

இந்த நிலையில், கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த 'டாலி' என்ற சரக்குக் கப்பல் கடந்த செவ்வாயன்று அதிகாலை வேளை கடந்து சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தூணில் மோதியது.

இதனால் இடிந்து விழுந்து பாலத்தில் சென்றுகொண்டிருந்த 7 வாகனங்கள் ஆற்றுக்குள் விழுந்தன. சம்பவத்தின்போது பாலத்தில் வீதியைச் செப்பனிடும் பணியில் ஈடுபட்டிருந்த மெக்ஸிகோ நாட்டுப் பணியாளர்களில் 2 பேர் மாத்திரம் மீட்கப்பட்டனர்.

ஏனைய 6 பேரைத் தேடும் பணி கடந்த 24 மணிநேரம்வரை நீடித்த நிலையில், நீரின் தட்பவெப்ப நிலை உள்பட பல்வேறு காரணங்களால் பணியாளர்கள் உயிரோடு இருக்க வாய்ப்பில்லை எனத் தெரிவித்து மீட்புப் பணிகளை அமெரிக்க கடலோரக் காவல்படை நேற்றைய தினம் மாலை கைவிட்டது.

இந்த நிலையில், நீரில் மூழ்கிய ராக்டரில் இருந்து இருவரின் உடல்கள் மீட்கப்பட்டன என மேரிலாண்ட் மாகாண நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட அந்தக் கப்பலில் பணியிலிருந்த 22 மாலுமிகளும் இந்தியர்கள் ஆவர். பாலத்தில் மோதுவதற்கு முன்னரே, கப்பலில் நிலவிய மின் பிரச்சினை காரணமாக கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகவும் பாலத்தின் மீது கப்பல் மோதுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என உள்ளூர் போக்குவரத்துத் துறை அதிகாரிகளிடம் மாலுமிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, பாலத்தில் வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால், இந்தச் சம்பவத்தின் மிகப் பெரிய உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், இந்திய மாலுமிகளின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பாராட்டு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொலம்பியாவில் 4 தொன் எடையுள்ள கொக்கைன் போதைப்பொருள் மீட்பு

கொலம்பியாவின் நடுக்கடலில் அதிவேக படகை துரத்திச் சென்று 4 தொன் எடையுள்ள கொக்கைன் போதைப்பொருளை அந்த நாட்டு இராணுவம் கைப்பற்றியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வருடம் கரீபியன் கடலில் கைப்பற்றிய மிகப் பெரிய தொகை கொண்ட கொக்கைன் போதைப் பொருள் இதுவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மேற்படி போதைப் பொருளின் பெறுமதி 11 கோடியே 30 லட்சம் அமெரிக்க டொலர்களாகும்.

கொலம்பிய கடற்படை, கொலம்பிய விமானப்படை மற்றும் அமெரிக்காவின் தெற்கு கட்டளையின் கூட்டு இடைநிலை பணிக்குழு ஆகியன இணைந்து சுற்றிவளைப்பு மேற்கொண்டன.

இந்த நிலையில், சான் ஆண்ட்ரேஸ் இஸ்லாவுக்கு அருகில் படகில் கடத்திச் செல்லப்பட்ட கொக்கைன் போதைப்



பொருளை கைப்பற்றியுள்ளதாக கொலம்பிய இராணுவம் தெரிவித்துள்ளது.

மற்றொரு படகில் கொலம்பிய இராணுவத்தினர் துரத்திச் சென்று அந்தப் படகை பிடித்து போதைப் பொருளை கைப்பற்றிய காணொலி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொலம்பிய பிரஜைகள் மூவரும், ஹோண்டுராஸ் பிரஜை ஒருவரும் மற்றும் வெனிசுலா பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உலகில் காணப்படும் கொக்கைன் போதைப்பொருளில் 60 சதவீதமானவை கொலம்பியாவில் உற்பத்தி செய்யப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 4

கனடா முரசு

வியாழக்கிழமை 28/03/2024

## கனடா மக்கள்தொகை 2023 இல் அதிகரிப்பு!

கியூபெக், மார்ச் 28

2023ஆம் ஆண்டில் கனடாவில் அதிகளவு மக்கள்தொகை வரவு பதிவாகியுள்ளது.

1950களுடன் ஒப்பிடும் போது 2023ஆம் ஆண்டில் C2▶

# ஆட்சியாளர்களைக் கேள்விக்குட்படுத்துபவர்களின் குடும்பங்களின் வாழ்க்கை நெருக்கடிக்குள்ளாகிறது

## மத்திய விசாரணை ஆணைக்குழுவிடம் தெரிவிப்பு

ஒன்ராரியோ, மார்ச் 28

**அதிகாரத்துவ அரசாங்கங்கள், உறுப்பினர்கள் ஆட்சியாளர்களை கேள்விக்குட்படுத்தும் போது குடும்பங்களின் வாழ்க்கையை மிகவும் கடினமாக்கும் வழிகளைப் பற்றி புலம்பெயர் சமூகங்களின் உறுப்பினர்கள் புதன்கிழமை நாடாளுமன்ற விசாரணையில் தெரிவித்தனர்.**

**பல்வேறு சமூகங்களின் பிரதிநிதிகள் குழுவிடம் இருந்து வெளிநாட்டு தலையீடுகள் தொடர்பான மத்திய விசாரணை ஆணைக்குழு விசாரணை நடத்தியது.**



கனடாவில் குடியேறிய பல ரஷ்யர்களுக்கு பெற்றோர் அல்லது பிற உறவினர்கள் உள்ளனர் என்று ரஷ்ய கனடிய ஜனநாயகக் கூட்டணியின் யூரி நோவோட்வோர்ஸ்கி கூறினார்.

கனடாவில் உள்ள ரஷ்ய தூதர்கள், மொஸ்கோவிற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடும் நபர்களை அடையாளம் காண வீடியோ கண்காணிப்பு மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர், என அவர் தெரிவித்துள்ளார்.

மற்ற சந்தர்ப்பங்களில், ரஷ்ய சமூகத்தின் உறுப்பினர்களுக்கு தூதரக சேவைகளுக்கான அணுகல் மறுக்கப்படலாம் எனவும், அதாவது அவர்கள் பயண ஆவணங்களை புதுப்பிக்கவோ அல்லது கனடாவிற்கு பார்வையாளர்களாக இன்னும் செல்லுபடியாகும் அந்தஸ்தை வைத்திருப்பதை உறுதிப்படுத்தவோ முடியாது என்றார்.

மனித உரிமை ஆர்வலர் எமிட் எஸ்மெய்லியோன், கனடாவில் உள்ள ஈரானிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பேரணிகளில் முகமூடிகள், சன்கிளாஸ்கள் மற்றும் தொப்பிகளை அணிந்து செல்வதால் அவர்களை அடையாளம் காண முடியாது என்றார்.

# தட்டம்மை நோயாளரின் எண்ண்ணிக்கை அதிகரிப்பு

## பிள்ளைகளுக்கான தடுப்பூசி குறித்து பெற்றோர்களை எச்சரிக்கிறது கனடாவின் பொது சுகாதார நிறுவனம்

ஒன்ராரியோ,மார்ச்28

கனடாவில் தட்டம்மை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கனடாவின் பொது சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.





2023ஆம் ஆண்டில் பதிவான நோயாளிகளின் எண்ணிக்கையில் மூன்று மடங்கு நோயாளர்கள் இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை பதிவாகியுள்ளனர் என பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் 40 தட்டம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

பெருமளவில் பரவக்கூடிய இந்த வைரஸ் தாக்கத்தினை எதிர்கொள்ள அவசியமான தடுப்பூசியைப் பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை எனப் பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமது பிள்ளைகள் தடுப்பூசி அட்டவணையில் உள்ள அனைத்து தட்டம்மை தடுப்பூசிகளையும் பெற்றிருப்பதனைப் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் உடனடியாக உறுதி செய்ய வேண்டும் என சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

# கார்பன் வரி சிக்கல் தொடர்பில் மக்கள் கருத்தையே கேட்போம்!

## பிரதமர் ட்ரூடோவின் பொருளியல் வல்லுனர்களின் கருத்தை அல்ல என்கின்றது கன்சர்வேட்டிவ் கட்சி

ஒன்ராரியோ, மார்ச் 28

கார்பன் வரி தொடர்பில் பொது மக்களின் கருத்தையே கன்சர்வேட்டிவ் கட்சி செவிமடுக்கும் என அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




அண்மையில், சுமார் 200 பொருளியல் வல்லுனர்கள் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றில் கார்பன் வரி தொடர்பான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் கருத்துக்கள் அர்த்தமற்றவை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கார்பன் வரியானது வாழ்க்கைச் செலவை அதிகரிக்கச் செய்துள்ளது என்கிற விவாதத்தை பிழையானது எனவும், மாசினை குறைப்பதற்கான எவ்வித மாற்று வழியையும் எதிர்க்கட்சியினால் முன்வைக்க முடியவில்லை எனவும் விமர்சித்து பல்கலைக்-கழகங்களைச் சேர்ந்த சுமார் 200 பொருளியல் வல்லுனர்களால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விமர்சனம் தொடர்பில் மார்ச் 27ஆம் திகதி வெளியான அறிக்கையில், தாம் வல்லுனர்களின் கருத்தினை நம்புவதை விட, சாதாரண மக்களின் கருத்தினையே செவிமடுப்போம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜஸ்டின் ட்ரூடோவின் பொருளியல் வல்லுனர்களுக்கு நாம் செவிமடுக்க மாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவரின் பேச்சாளர் செபஸ்டியன் ஸ்கெம்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த முதல்வர்கள் கார்பன் வரி தொடர்பில் பொய்யுரைக்கின்றனர்!

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றச்சாட்டு



சுஒன்ராரியோ, மார்ச் 28

கார்பன் வரி தொடர்பில் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த முதல்வர்கள் பொய்யுரைக்கின்றனர் எனப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை அதிகரிக்கவுள்ள கார்பன் வரியை இரத்துச் செய்யுமாறு பெரும்பாலான முதல்வர்களும், நாடாளுமன்றத்தில் உள்ள கன்சர்வேட்டிவ் உறுப்பினர்களும் குரலெழுப்பி வருகின்றனர்.

கார்பன் வரி அதிகரிப்புடன், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கனடியர்களுக்கு வழங்கப்படும் கார்பன் மீள்கொடுப்பனவிலும் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கார்பன் வரி அதிகரிப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் பொய்யான விமர்சனங்களை முன்னெடுக்கும் கன்சர்வேட்டிவ் அரசியல் பிரதிநிதிகள், கார்பன் மீள்கொடுப்பனவு குறித்த விவரங்களை மக்களுக்கு மறைக்கின்றனர் எனப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கார்பன் மீள்கொடுப்பனவினால் கனடிய மக்கள்தொகையில் 10இல் 8பேர் அதிக பணத்தைப் பெறுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் உள்ள கனடியர்களின் வருமானத்தை அதிகரிக்கக் கூடிய பல முக்கிய சட்டங்களை நிறைவேற்றவிடாது எதிர்க்கட்சி தடுத்து வருவதாகவும் பிரதமர் குற்றம் சுமத்தியுள்ளார்.

### கனடா மக்கள் தொகை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள்தொகை விரைவில் அதிகரித்ததாக கனடாவின் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாக அதிகரித்த கனடாவின் மக்கள் தொகை, 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியின் போது 40,769,890ஆக பதிவாகியிருந்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

98 சதவீதமான மக்கள்தொகை அதிகரிப்புக்கான காரணமாக சர்வதேச புலம்பெயர்வு குறிப்பிட்டுக் காட்டப்படுவதுடன், அதிலும் பெரும்பாலானவை தற்காலிக வதிவிடவாசிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல், 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரையான காலப்பகுதியில், கனடா முழுவதிலும் 1,271,872 பேரால் மக்கள்தொகை அதிகரித்ததுடன், அதில் 471,771 பேர் புலம்பெயர் குடிபெயர்ந்தவர்களாகவும், 804,901 பேர் தற்காலிகமாக வதிபவர்களாகவும் பதிவாகியுள்ளனர்.

# மத்திய அரசின் சுகாதார உடன்படிக்கையில் இறுதியாக அனைத்து மாநிலங்களும் ஏற்றன

## கடைசியாக கியூபெக் நேற்று ஒப்பமிட்டது



ஒன்ராரியோ, மார்ச் 28

மத்திய அரசாங்கத்தின் சுகாதார உடன்படிக்கையில் அனைத்து மாநிலங்களும் கையெழுத்திட்டுள்ளன.

இறுதி மாநிலமாக கியூபெக் மாநிலம் 3.7 பில்லியன் டொலர்கள் சுகாதார உடன்படிக்கையில் நேற்று மார்ச் 27ஆம் திகதி கைச்சாத்திட்டது.

மத்திய சுகாதார பரிவர்த்தனைகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட உதவிகளை வழங்கும் நோக்குடன் மாநிலங்களுக்கான புதிய சுகாதார நிதியுதவி வழங்கும் திட்டத்தை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒரு வருடத்திற்கு முன்னர் முன்மொழிந்திருந்தார்.

இந்த அறிவிப்பை மாநில முதல்வர்களும், சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்களும் கனடாவின் சுகாதாரத் துறையின் வீழ்ச்சியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

மத்திய அரசாங்கத்தின் சுகாதார உதவிக்கு அப்பால், இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது, கனடியர்களின் சுகாதார நிலையை இந்த நிதியின் ஊடான சேவைகள் மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து விவரங்களை மாநிலங்களிடமிருந்து மத்திய அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தமது மாநில அதிகாரம் சவாலுக்குட்படுத்துவதாக தெரிவித்து இந்த உடன்படிக்கையில் நீண்ட நாடள்களாக கியூபெக் மாநிலம் கையெழுத்திடாதிருந்தது.

எவ்வாறாயினும், சுகாதாரம் மீதான மாநிலத்தின் நேரடியான அதிகாரத்தை உறுதிசெய்யும் வகையில் மார்ச் 27ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.




# வாகனத் திருட்டு விசாரணையில் இதுவரை 48 வாகனங்கள் மீட்பு!

ஒன்ராரியோ, மார்ச் 28

இரகசிய வாகனத் திருட்டு விசாரணையின் ஒரு பகுதியாக 48 திருடப்பட்ட வாகனங்களைக் கைப்பற்றியதாக டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மார்ச் 27ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், கையகப்படுத்தப்பட்ட சில வாகனங்கள், ஆறு மீட்கப்பட்ட துப்பாக்கிகள் என்பவற்றை காட்சிப்படுத்தினர்.

இரகசிய போதைப்பொருள் மற்றும் துப்பாக்கி கடத்தல் விசாரணையின் போது ஏப்ரல் 2023 இல் சேகரிக்கப்பட்ட தகவல்கள் திருடப்பட்ட வாகனங்களை மையமாகக் கொண்டு அந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரண்டாவது விசாரணையைத் தொடங்க வழிவகுத்தன எனக் காவல்துறை கூறுகிறது.

மீட்கப்பட்ட வாகனங்களில் இருபது பேர்லிங்டனில் உள்ள ஒரு கப்பல் இடத்தில் கைப்பற்றப்பட்டதாகவும், மேலும் 20 வாகனங்கள் டொரான்டோ மற்றும் மொன்றியலில் உள்ள எல்லை முகவர்களின் உதவியுடன் தடுத்து நிறுத்தப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# சர்வதேச மாணவர்கள் கற்கைக்கான அனுமதிகள் ஒன்ராரியோவில் 2 ஆம் நிலை நிறுவனங்களுக்கு!

ஒன்ராரியோ, மார்ச் 28

ஒன்ராரியோ தனக்கு ஒதுக்கப்பட்ட சர்வதேச மாணவர் கற்கை அனுமதிகளில் பெரும்பகுதியை திறமையான வர்த்தகங்கள், குழந்தை பராமரிப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற தேவைக்கேற்ப திட்டங்களை வழங்கும் இரண்டாம் நிலை நிறுவனங்களுக்கு வழங்கவுள்ளது.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் அமைச்சர் ஜில் டன்லப் கூறுகையில், பட்டப்படிப்பை முடித்தவுடன் தேவைக்கேற்ப வேலைகளை ஆதரிக்கும் திட்டங்களுக்கு மாநிலம் முன்னுரிமை அளிப்பதாகத் தெரிவித்தார்.

சர்வதேச மாணவர் அனுமதிகளைக் குறைப்பதாக இவ்வருட ஆரம்பத்தில் மத்திய அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதனால், ஒன்ராரியோவிற்கான ஒதுக்கீடு பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டில் முதல்வர் டக் ஃபோர்டின் அரசாங்கம் கல்விக் கட்டணத்தை 10 சதவீதம் குறைத்து அதை முடக்கிய பின்னர் மாநிலத்தில் உள்ள இரண்டாம் நிலை கல்வி நிறுவனங்கள், குறிப்பாக கல்லூரிகள், சர்வதேச மாணவர்களின் பக்கம் திரும்பியது.

இந்த வார ஒன்ராரியோவின் வரவு செலவுத் திட்டம், கல்லூரித் துறையில் இழந்த சர்வதேச மாணவர் வருமானம், மாநிலத்தின் புத்தகங்களில் காட்டப்படும் நிதி, இரண்டு ஆண்டுகளில் மொத்தம் சுமார் 3 பில்லியன் டொலர்கள் ஆகும்.




# வீடு வாடகைக்குப் பெறுவோரின் நலன் குறித்து பிரதமர் அவதானம்

ஒன்ராரியோ, மார்ச் 28

தங்கள் வீடுகளை வாடகைக்கு எடுப்பவர்களுக்கு பாதுகாப்பு – நிதி உரிமைகள் ஏற்பாடுகள் மற்றும் நம்பகமான வாடகைதாரர்களுக்கு அவர்கள் வீடு வாங்க விரும்பும் போது கடன் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு ஆதரிக்க விரும்புகிறது.

மாதாந்த மோரட்கேஜ் கட்டணமாக 2,000 டொலர்கள் செலுத்தப்படும் அதேவேளை, மாதாந்தம் 2,000 டொலர்களை வாடகையாக செலுத்துவதில் அடிப்படையாகவே பிழை இருக்கின்றது என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

வாடகை செலுத்துபவர்கள் முக்கியம் எனவும், கனடியர்கள் மிகவும் கடினப்பட்டு உழைத்த பணத்தை வாடகைக்காகச் செலுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து தலைமுறையினருக்கும் பொருத்தமான பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கே தமது அரசாங்கம் முயற்சி செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் 15 மில்லியன் டொலர்கள் வாடகைதாரர் பாதுகாப்பு நிதியம் உள்ளடக்கப்படவுள்ளது, அநீதியான வாடகை அதிகரிப்பின் போதான சட்ட செலவுகள் போன்றவற்றிற்கு இது உதவும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், வாடகைதாரர்கள் சட்ட உரிமைகள் சட்டமூலமும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.